உ

# அருள்மிகு கருணாம்பிகை சமேத
# அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில்

**( தோஷங்கள் நிவர்த்தி மற்றும் சர்ஷ்டியப்த்த பூர்த்தி சிறப்பு ஸ்தலம்)**

(தொண்டை மண்டல பேரரசர் சுந்தர சோழனால் (கி.பி.957-973) காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில்)

**(தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறை ஆளுகைக்குட்பட்டது)**

**வேளச்சேரி, சென்னை - 600 042. போன்: 044 - 22436121**




## புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்பன
# மஹா கும்பாபிஷேகம்

## அழைப்பிதழ்

**நாள்: 14.06.2017, புதன்கிழமை**

**காலை 6.00 மணி முதல் 7.25 மணிக்குள்**



சீராரும் மறையும் தில்லைவாழ்நதணமும்
பாரராரும் புவி முனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரும் மணிமன்று கொடுத்த திருவடி போற்றி

tnhrce.org

பேரன்புடையீர்,

ஆதியந்தம் இல்லா கருணாமூர்த்தியாகி அகிலமும் உய்யும் பொருட்டு எங்கும் நிறைந்து அனைத்து ஜீவராசிகளையும் ரக்ஷிக்கும் இறைவன் முன்பு தாருகாவனத்தில் அருகே (தரமணி, புவேத மூர்த்திகளாலும் பூகனை புரிய பெற்று அசுரர்களின் கோரபிடியிலிருந்து தப்புவதற்காக வேதங்கள் குளத்தில் மறைந்ததால் வேதஸ்ரேணி எனும் பெயர்பெற்று வேளச்சேரி எனும் தலத்தில் திருகடையூரில் மார்கண்டேயரை பிடிக்க வீசிய தண்டத்தை இழுந்த யமதர்மராஜன் இறையருளினால் மீண்டும் இத்தலத்தில் தண்டத்தை பெற்ற காரணத்தினால் தண்டீஸ்வரர் எனும் நாமத்தையுடைய பெருமானுக்கு நாளது லேயும் லம்ப (ஹேவிளம்பி) வருடம் வைகாசி மாதம் 31ம் நாள் **(14.06.2017) புதன்கிழமை** பஞ்சமி திருவோண நட்சத்திரம் சித்தயோக கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்குமேல் 7.25 மணிக்குள்ளாக மிதுன லக்னத்தில் **அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்** நடைபெற இறையருள் கூடியுள்ளதால் அனைத்து ஆன்மீக பக்தர்களும் கீழ்காணும் நிகழ்ச்சிகளின் படி அனைத்து பூஜைகளிலும் கலந்து கொண்டு ஸ்ரீ தண்டீஸ்வரர் அருள்பெற கேட்டுக் கொள்கிறோம்.

**மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர்**

## புரட்சிதலைவி அம்மா அவர்களின்

## சீர்மிகு திட்டத்தின்படி நடைபெறும்

**திருக்குடமுழுக்கு பெருவிழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், மற்றும் சமய சான்றோர்கள் கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.**

**அது சமயம் பக்த பெருமக்கள் அனைவரும் திருக்குடமுழுக்கு பெருவிழாவில் கலந்துக்கொண்டு ஸ்ரீ தண்டீஸ்வரர் திருவருளை பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்...**

இங்ஙனம் :

**பெ.கொளஞ்சி**
தக்கார்

**வி.ரமேஷ்** M.A., B.L.,
செயல் அலுவலர்

**வேளச்சேரி ஊர்பொதுமக்கள் & உபயதாரர்கள், திருக்கோயில் பணியாளர்கள்**
**அனைவரும் வருவீர்! அருள்மிகு தண்டீஸ்வரர் அருள் பெறுவீர்!!**

## மஹாகும்பாபிஷேக நிகழ்ச்சிநிரல்

| | | |
|---|---|---|
| வைகாசி 25<br>08.06.2017<br>வியாழன் | மாலை 6.00 மணிக்கு | ஸ்ரீ விநாயகர் பிரார்தனை, தேவதா அனுக்ஞை, மிருத்ஸங்க்ரஹணம், ப்ரவேச பலி, ரக்ஷோக்னஹவனம் |
| வைகாசி 26<br>09.06.2017<br>வெள்ளி | காலை 7.00 மணிக்கு | கணபதி ஹோமம், தன பூஜை, கோ பூஜை, நவக்ரஹ ஹவனம் |
| | மாலை 6.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, அங்குரார்பனம், பிரார்தனை ஆச்சாரியர் ரக்ஷாபந்தனம் |
| வைகாசி 27<br>10.06.2017<br>சனிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | சாந்தி, மூர்த்தி, திசா, ஸம்ஹிதா ஹோமங்கள், தீர்த்த ஸங்க்ரஹணம், அக்னி சங்க்ரஹணம், யாகசாலா அலங்காரம் |
| | மாலை 4.30 மணிக்கு | ஆச்சாரிய, ரிக்ஷக் வர்ணம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், யாத்ரா ஹோமம், தானம், கட புறப்பாடு, யாகசாலை ப்ரவேசம் முதல் கால யாக பூஜை ஆரம்பம் |
| வைகாசி 28<br>11.06.2017<br>ஞாயிறு | காலை 8.00 மணிக்கு | விசேக்ஷ சந்தி, யாகசாலை பூஜை காலம் - 2 பூர்ணாயஹுதி பிரசாதம் |
| | மாலை 5.30 மணிக்கு | விசேக்ஷ சந்தி, யாகசாலை பூஜை காலம் - 3 பூர்ணாயஹுதி பிரசாதம் |
| வைகாசி 29<br>12.06.2017<br>திங்கள் | காலை 7.00 மணிக்கு | விசேக்ஷ சந்தி, யாகசாலை பூஜை காலம் - 4 அஷ்டபந்தன சமர்பணம் பூர்ணாயஹுதி பிரசாதம் |
| | மாலை 5.30 மணிக்கு | விசேக்ஷ சந்தி, யாகசாலை பூஜை காலம் - 5 பூர்ணாயஹுதி பிரசாதம் |
| வைகாசி 30<br>13.06.2017<br>செவ்வாய் | காலை 8.00 மணிக்கு | யாகசாலை பூஜை காலம் - 6 பூர்ணாயஹுதி பிரசாதம் |
| | மாலை 4.30 மணிக்கு | யாகசாலை பூஜை காலம் - 7 தத்வார்ச்சனை நாடீஸந்தானம், ஸ்பர்ஹாஹுதி, பூர்ணாயஹுதி பிரசாதம் |
| வைகாசி 31<br>14.06.2017<br>புதன் | அதிகாலை 4.30 மணிக்கு | யாகசாலை பூஜை காலம் - 8 அவப்ருதயாகம், மஹாபூர்ணாஹுதி யாத்ராதானம் |
| | காலை 6.00 மணிக்கு | கலசம் புறப்பாடு |
| | காலை 6.30 மணிக்கு | **இராஜகோபுரங்கள் கும்பாபிஷேகம்** |
| | காலை 6.45 மணிக்கு | **பரிவாரங்கள் கும்பாபிஷேகம்** |
| | காலை 7.00 மணிக்கு | **ஸ்ரீ தண்டீஸ்வரர் கும்பாபிஷேகம்** |
| | காலை 7.15 மணிக்கு | ஸ்ரீ கருணாம்பிகை அம்மனுக்கு கும்பாபிஷேகம் |
| | | சண்டயாகம் நிர்மால்ய நிவேதனம், தீர்த்த பிரசாத விநியோகம் |
| | காலை 10.00 மணிக்கு | **மஹாபிஷேகம்** |
| | மாலை 6.00 மணிக்கு | திருக்கல்யாணம் வைபவம் மற்றும் சுவாமி உள்புறப்பாடு நடைபெறும் |

tnhrce.org

ஸர்வ சாதகம்
ரா.ராமநாத சிவாச்சாரியார்
நெசப்பாக்கம்



உபசர்வசாதகர்
வி.குமாரசாமி
ஆலய குருக்கள்



## திருக்கோயில் ஸ்தல புராணம்

tnhrce.org

திருக்கடையூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானால் பரிக்கப்பட்ட தண்டத்தை மீளப்பெற யமதர்மன் கயிலாயம் நோக்கி வடதிசையில் சென்றான். வழியில் நாரதரைச் சந்தித்து நடைபெற்ற சம்பவத்தைக் கூறினான்.கயிலைக்கு நேராகச் செல்வதை விடப் பூவுலகில் தொண்டை மண்டலத்தில் வேதங்கள் பூசித்தருள்பெற்ற வேதச்சிரேணியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை ஏகாந்தமாக பூசிப்பதே ஏற்றது என நாரதர் அருளினார். யமதர்மனும் வேதச்சிரேணி சென்று ஒரு தீர்த்தத்தை உருவாக்கினான். இத்தீர்த்தத்தில் நீராடி அங்கு எழுந்தருளிய லிங்த் திருமேனியை அபிஷேக ஆராதனைகளுடன் முறைப்படி வழிபட்டான். யமனின் பூசைகளை ஏற்ற ஈசர் நேரில் காட்சியளித்து கேட்கும் வரத்தை கொடுப்பதாக அருளினார். என்னிடம் இருந்து பரித்துக்கொண்ட தண்டத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்றும், தண்டத்தை மீண்டும் வழங்கிய ஈசருக்கு தண்டீஸ்வரர் எனப் பெயர் வழங்கப்பட வேண்டும் எனவும், நான் பூசித்த லிங்கத்திற்கு (தண்டம்) தண்டபாணிஸ்வரர் எனப் பெயர் வழங்க வேண்டும் எனவும், அப்பெருமானை மெய்யன்புடன் வழிபடும் அடியார்களுக்கு மந்தகாசம், வயிற்று உளைவு, குட்டம், வாதம், காமாலை போன்ற நோய்களால் பாதிப்பு ஏற்படாமல் காக்க வேண்டும் என யமதர்மன் வரம் வேண்டிப் பெற்றான். ஈசனும் இவ்வரங்களை அளித்துவிட்டு அருட்குறியாம் சிவலிங்கத்தினுள் மறைந்தார். நாளடைவில் இப்பெயர் மருவி தண்டீஸ்வரர் என அழைக்கப்படுகிறார் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்.

**அனைவரும் வருவீர் !**

**அருள்மிகு தண்டீஸ்வரர் அருள் பெறுவீர் !!**

இத்திருக்கோவிலில் ஆயுஸ் ஓமம், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், பீமாரத சாந்தி ஆகிய பூஜைகள் விமரிசையாக நடைபெற்று வருகிறது. தினசரி 100 நபர்களுக்கு அன்னதானம் நடைபெறுகிறது, அன்னதானத்திற்கு பக்தர்கள், பொதுமக்கள் தங்களுடைய பிறந்த நாள் மற்றும் இதர விஷேச தினங்களில் வழங்கி திருக்கோவில் அலுவலகத்தில் நாள் ஒன்றுக்கு ரூ 2500 /- செலுத்தி அச்சு ரசீது பெற்றுக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.